இலக்கியம் – வாழ்வின் புரிதலுக்கான கருவி

அரிவை

மாத இதழ்

கையெழுத்துப் பிரதி

இதழ் 6

December

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அரிவை

இலக்கிய இதழ்
மாத இதழ்

கையெழுத்துப் பிரதி
டிசம்பர் '03.

ஆசிரியர் குழு

DR. சத்யராஜேஷ்வரன் M.D
DR. மகேந்திரகுமார் M.D

பொறுப்பு ஆசிரியர்

S. பாஸ்கரன் IV - BSMS
N. காளிதாஸன் IV - BSMS
P. சரவணக்குமரன் IV - BSMS

உதவி ஆசிரியர் குழு

பிரதாப் குமார் I - BSMS
S. சுரேஷ் III - BSMS

இதழ் வடிவம்

E. சரவணன் IV - BSMS

உள்ளடக்கம்

* தலையங்கம்
* கவிதைகள்
* கட்டுரைகள்
* நூல் அறிமுகம்
* புறத்திலிருந்து
* சினிமா விமர்சனம்
* சிறுகதை.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தலையங்கம்

துணை பாடமாகும் சித்த மருத்துவம்

அலோபதி மருந்தாளுநர்களுக்கு இந்திய மருத்துவம் மற்றும் ஆயுர்வேதி துறை 6 மாதம் சித்த மருத்துவ துறையில் பயிற்சி அளித்து காலியாக உள்ள சித்த மருந்தாளுநர்களுக்கான காலி இடங்கள் நிரப்பப்படும் – அரசு செய்தி.

* இது தவிர செவிலியர் படிப்பில் யோகா, தொக்கணம் முதலிய சித்த மருத்துவ பாடத்திட்டம்

* இயற்கை மருத்துவம் என்ற பெயரில் இந்திய மருத்துவ முறைகளை ஒன்றாக கலந்து புதிய மருத்துவ முறை.

* மூலிகை அறிவியல், மருத்துவ தாவரவியல் B.Sc, M.Sc., பட்டப்படிப்புகள்.

* மசியோதெரபி பாடத்திட்டத்தில் தொக்கணம், யோகா பாடங்கள்.

இவ்வாறு சித்த மருத்துவ சிறப்புகள் அனைத்தும் தனித் தனியாக கூறு போட்டு அதற்கு அறிவியல் விளக்கம் வடிவங்கி அதனை புதிய துறையாக மாற்றுகின்றனர். மிக முக்கியமாக சித்த மருத்துவத்திற்கும் அதற்கும் உள்ள தொப்பை திட்டமிட்டு அழிந்து விடுகின்றனர். [தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள உறவு மறைக்கப்பட்டு இருவரும் அனாதையாகின்றனர்].

வரும் காலத்தில் அலோபதி மருத்துவ பாடத்திட்டத்தில் ஒரு துணை பாடமாகவும், பட்ட மேற்படிப்பில் யோகா, தொக்கணம், இயற்கை மருத்துவம் (நேச்சுரோ) M.D, டிப்ளமோ படிப்புகள் உருவாக்கப்படலாம்.

ஏனெனில் இன்றில் முழு அறிவியல் உண்மை இருக்கும் பட்சத்தில் அதனை அலோபதி மருத்துவம் உட்கிரகித்துக் கொள்வதற்குத் தயங்குவதில்லை இதற்கு தக்க உதாரம் :- யோகாவிற்கு தனி பல்கலைக் கழகம் அமைப்பது.

யோகா, தொக்கணம் நம் சித்த மருத்துவத் துறையில் இருந்து சமீபத்தில் கனவு போய் கொண்டிருக்கும் நிலை. கடைசியில் எஞ்சி இருப்பது சித்த மருத்துவம் என்ற திப்பியே.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

மஞ்சள் கொடுத்து புண்ணை வாங்கி

- கலாச்சார இறக்குமதி.

கணிப்பொறியின் mouse - ஐ பிடித்து உலகம் சுருங்கியதில், உலகம் முழுவதும் கலாச்சார பரிமாற்றம் ஏற்பட்டது. பண்டமாற்று தந்திரம் புதிய கலையில் பரிமாறப்பட்டதால் எங்கும் மாற்றம். மேற்கு நாற்கில் பிரதிபலிக்க, கிழக்கு வடக்கில் உறங்கியது. இந்திய அறிவு Instalment ல் விற்கப்பட, அவரிந்த உடையும், உணவும், DL Jeans களும், Pizzaக்களும் இந்திய மண்ணில் இயல்பை மாற்றியது. ஆன்மிகமும் அருளும், அசாதிய அறிவுத் திறனையும் அமைத்த அடிநாளமான இந்திய கலாச்சாரம் ஆபாசமும் ஆடம்பரமுமாக நிறைந்தது. சாப்ட்வேர் நிறுவனங்கள் ரயின்லியின் நிவாசமும் வளர்ந்தது. இன்னும் தேவையா இழிநிலை உளறியும். சிங்கப்பூரில் சிங்காரிகளுடன் சிரங்காரித்த சீரிய தமிழர்கள் அனைவரும் இந்திய அறிவை இறக்குமதி செய்ய சென்றவர்கள் என்ற செய்தி இந்தியாவையும் அதன் அடித்தளத்தையும் உலுக்குகிறது. விவேகானந்தரின் வாக்கு - இந்த நாட்டின் கலாச்சாரம் தவிர பொடியாகும் காலம் நெருங்கியின் உண்மை சொரூபம் வெளிப்படும். அமெரிக்காவிற்கு இங்கிருந்து ஆன்மிகத்தை ஏற்றுமதி செய்ய, அவலட்சணங்களை நாம் அங்கிருந்து இறக்குமதி செய்கிறோம். அகத்தில் புண்ணை வைத்து ஆபரண அலங்காரம் செய்யவும் புறமாகப் பரவும் நாற்றம் அடையாளம் காட்டும். பணமே குறிக்கோளாய் பறந்து கொண்டு இருந்தாலும் PASSPORT - ல் "இந்தியன்" என்ற அடையாளம் ஒரு கௌரவமாகக் கொள்ளுங்கள். பாரத பூமி புனிதம் என்பதை புவிக்கு உணர்த்துவோம்.

- மரு. சத்திய ராமேஷ்வரன் எம்.டி (சி)

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கவிதை

வெற்றாகு கசிந்து கொண்டேயிருக்கும் வெறுமை.

வாய் தானாக அறுக்கிக் கொண்டது
மௌனம் ஒரு புள்ளியிலிருந்து
சிறிது சிறிதாகப் பெருகி
உரத்தக் கத்தலுடன்
என் இதயத்தின்
மெல்லிய நரசகளை
பலம் கொண்டு உதைத்து
அதன் அதிர்வுகள் என் மண்டையோட்டுக்குள்
சூழ்டி மோதி வெளிவர முடிக்கின்றது.
தொண்டையின் உருண்டை பருத்து
வெடித்து வரும் போலைக்க
வலிகள் மறைங்கி நிரைக் கொட்டியது.
நெஞ்சை விம்மி
நான் உமிழ்ந்த பெருமூச்சு
மூக்குள்ளிருந்த
மொத்த பிராணனையும்
உபரை இழுத்துக் கொண்டு
போய் விடுவது போலிருந்தது.
மீண்டும் கணநேரத்தில்
என் இதயத்தின் வெற்றறைகள்
இரும்பைக் கொண்டு நிரப்பி
உடல் முழுவதும்
இதயம்
இரும்பின் எடைத் தாழாமல்
லையாடுவது போலிருக்க,
வீசிய குளிர் காற்றின்
மெல்லிய ஸ்பரிசம்
உடலை லேசாக்கி
இதயத்தின் வெற்றறைகளை
கனமாக்கியது.
மீண்டும்
தொண்டையின் உருண்டை பருத்து...

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தாங்க வைம்மி . . .
பெருமூச்சு உமிழ்ந்து . . .
புனைவாய் தருக்கம்
உன் வருகைக்குப் பின்னும்

என் வெறுமையின்

பரிமாணங்களும்

பரிணாமங்களும்

தீராதென்று தெரிந்தே

தீருமென்று மௌனம் கொள்கிறேன்

கவை . . . .

நிந்தம் நிந்தம்

நிகழும் போது.

— ஜீவன் BSMS

வாழ்க்கையின் தரிசனம்

— வாழ்க்கை என்பது ஏவ்வொரு நிமிடமும் நடக்கக்கூடிய ஏரு நல்ல நிகழ்வையே நினைக்கக்கூடியது. எப்படியாவது வாழ்க்கையை ஏய்து விடலாம் என்று பலர் நினைக்கின்றனர். இது ஏரு மாயத்தான் தனம், கொள்கைத்தனம், கையாளாகத்தனம் ஆகிய. வாழ்க்கையானது ஏவ்வொருத்தருக்கே இன்ன ஏரு அர்த்தங்களை, பயனுள்ள, இன்பமான தாகவும் இருக்க வேண்டிய. ஏவ்வொரு நொடியும் வாழ்க்கையின் ~~பல~~ வாழ்நாள் இணைகிறது. இன்பம் மட்டுமே வாழ்க்கையாகாது. துன்பத்திலும் தானாக பிறக்கிறது என ஸாக்ரடீஸ் பெர்னாட்ஷா அது போல் பணம் மட்டுமே வாழ்க்கை என்று நினைக்கக்கூடியவர்கள் அந்த பணத்தை கட்டிக் காப்பதிலேயே தன் வாழ்நாளை வீணாக்கிக்கின்றனர். எளிமையான வாழ்க்கையானது. நாம் அன்றாடம் கீழ் கூறிய சில்லறை எதையாவது செய்தோம் என நினைக்க வேண்டும்.

1. ஏரு யாருக்காவதுஏ உதவி செய்திருக்கிறோம் ?
2. இன்று யார் மனதையும் துன்பப்படுத்தாமல் நடந்திருக்கிறோம் ?
3. இன்று புதியதாக ஏதாவது கற்றிருக்கிறோம் ?

இந்த மேலே கேள்விகளை தினமும் கேட்டுக்கொள்ளுதல் இந்த வாழ்க்கையின் அர்த்தம் புரியும்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

புதிய மனுதர்மம்.

நம் நாட்டில் நடைமுறையில் உள்ள கல்வி கொள்கையானது "மெக்காலே" என்ற ஆங்கில அதிகாரியால் வகுக்கப்பட்டது. அவரின் நோக்கம், "நன் அடிமைத் தனத்தையும், தேசிய ஒருதலையையும், சுய மரியாதையையும், ஜனநாயகத்தில் சொரணையற்று, நிர்வாகப் பணி செய்யும் ஒரு மனியாட்டு மூளையும் கொண்ட கல்வி கற்ற தலைமுறையை உருவாக்குவதே." "உடலால் இந்தியனாகவும், சிந்தனையால் முழுமையாக ஆங்கிலேயத்திற்கு அடிமை சேவை செய்யவும்; நிர்வாகப் பணியாளர்கள் வேண்டி, திட்டமிட்டு ஜாதி, மத, இன முரண்பாடுகளை நன்கு கூர் தீட்டி, பல நூறு ஆண்டுகள் இன்றும் அதிலிருந்து வெளிவர இயலாத வண்ணம் மூளையை மழுங்கடிக்கும் கல்விக்கொள்கையை நடைமுறைப் படுத்தினர்". அதுவே இன்றுவரை அமைந்த பின்னரும் நம் நாட்டின் நிலையான கல்விக் கொள்கையானது:

இப்போது புதிய கல்வி கொள்கையானது, அமெரிக்கா தலைமையில் அணி திரண்டுள்ள பணக்கார நாடுகளால் [G-8] உருவாக்கப்பட்டுள்ளது. உலகின் வளரும் மற்றும் மூன்றாம் நாடுகளின் மீது தனியார் மயம், தாராள மயம், உலக மயம் என்ற "காட்" ஒப்பந்தத்தின் மூலமாக மறுகாலனி ஆதிக்கம் செய்யும் நாடுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழை நாடுகளின் சுயவாங்குதலை சுரண்டும் நோக்கில் வகுக்கப்பட்ட புதிய பொருளாதார கொள்கையின் மூலம் கல்வித் துறையை நவீன வியாபார நோக்கம் துறையாக கண்டறிந்து உலகம் முழுவதும் அதில் முதலீடு செய்கின்றன, பன்னாட்டு நிறுவனங்கள்.

அதன் விளைவே, தற்போது கடைச் சரக்காகிப் போன, தொழிற்கல்விகள் (B.E, மற்றும் அனைத்து மருத்துவப் படிப்புகளும்) புதிய பொருளாதார கொள்கையின் விளைவால் எதைப் படித்தால் வேலை கிடைக்கும் என்று அலையும் மாணவர்களை குறி வைக்கின்றன இந்த பன்னாட்டு நிறுவனங்கள்.

உலக வங்கியின் உத்தரவுக்கு அடிபணிந்து, கல்விக்கு அழங்கப்பட்டு வந்த மானியங்கள் அனைத்தும் நிறுத்தப்படுகிறது. பள்ளிக் கூடங்கள் முதல் கல்லூரிகளில் உள்ள பல துறைகள் வரை மூடப்படுகின்றன. பள்ளி, கல்லூரிகளில் நிரப்பப்பட வேண்டிய ஆசிரியர், பேராசிரியர்களுக்கான காலி இடங்கள் நிரப்பப்படுவதில்லை. அவ்விடங்கள், "தினக் கூலிக்கு வேலை செய்ய காத்திருக்கும் படித்த வேலையற்ற இளைஞர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. அனைத்து அரசு கலை - அறிவியல் கல்லூரிகளை பல்கலைக் கழகத்துடன் இணைத்து, அரசு கல்வி மானியத்தை நிறுத்தி, இவற்றின் நிர்வாகச் செலவுகளுக்கு மாணவர்களிடமே அதிக கட்டணம் வசூலித்து தேவையை தீர்த்து செய்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

பருங்கமாக, "நமக்கு நாமே திட்டம்", "நம் கை இருக்கும் போது அரசின் உதவி எதற்கு" என்ற அடிப்படையில். உயர் கல்வி, Ph.D, பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, மருத்துவம் மற்றும் பொறியியல் கல்விக்கான கல்வி கட்டண உயர்வு. இவை அனைத்தும் உலக வங்கியின் உத்தரவே.

தனியார் மயத்தால் மாட்டுத் தொழுவத்தை விட கேவலமான தரத்துடன் விதி தோறும் பொறியியல் கல்லூரிகள். எஞ்சியிருந்த மருத்துவக் கல்வியும் தனியார் மயத்தால், கல்வி கட்டணம் என்ற பெயரில் மாணவர்களின் இரத்தத்தை உறிஞ்சுகின்றன. மருத்துவப் படிப்பில் சேருவதற்கு இடஒதுக்கீடு முறையில் தகுந்த மதிப்பெண் இருந்தும், இடம் கிடைத்தும், தனியார் கல்லூரிகளின் கட்டாய நன்கொடைக்கு கொடுக்க இயலாததால் ஏழை, நடுத்தர வருமான மாணவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். இதற்கு நேரடி சாட்சி நம் கல்லூரியின் முதலாம் இண்டு மாணவர்களின் பதிவு.

"உயர் சாதிக்கே உயர் கல்வி" - இது பழைய மனுதர்மம்.

"காசு உள்ளவனுக்கே கல்வி" - இது புதிய [காட் ஒப்பந்தத்தின்] மனு தர்மத்தின் ஒரு கொள்கை.

- கோபு BSMS

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

நூல் அறிமுகம்

அடிமை வரலாற்றின் பிரதான ஆவணம்.

நூல் : கறுப்பின அடிமையின் சுய வரலாறு. – பிரெட்ரிக் டக்ளஸ்.
தமிழில் : ஆ. நடராசன்

பிரெட்ரிக் டக்ளஸ் (1818–1895) அமெரிக்க கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய போராளி. 1840–50 களில் அமெரிக்காவில் நடந்த அடிமை எதிர்ப்பு இயக்கத்தின் பேச்சாளர், எழுத்தாளர். டக்ளஸின் இளமைக் காலம் முழுவதும் சாட்டையடிகளுடனும், எப்போதும் வலி முழுவதும் வதிந்து உறைந்த ஆரத்தங்களுடனும், சிதி மடிந்த காயங்களுடனும், பசியுடனுமே கழிந்தது. 1838-ல் உரிமையாளரிடம் இருந்து நியூயார்க்-கிற்கு தப்பி வந்து சுதந்திர மனிதனாகிறார். அங்கே திருமணமும் செய்து கொள்கிறார். அடுத்த மூன்று ஆண்டுகளில் அடிமை ஒழிப்பு இயக்கத்தின், முழுநேரப் பேச்சாளர் ஆகிறார். புகழ் பெறுகிறார். இவ்வளவு பெரிய தலைவர், அடிமையாக இருந்திருக்க முடியாது என்ற பிரச்சாரத்தை முறியடிக்க இந்த சுய சரிதையை எழுதுகிறார். 1847 ல் "The North Star" என்ற இதழைத் தொடங்கி, 1863 வரை வந்த அந்த இதழில் அடிமை முறைக் குறித்த நம்கரைணர் பலவற்றை எழுதுகிறார். குடியரசு கட்சிக்கு அரசவாசமாக இருந்த லிங்கன் காலத்தில் முக்கிய அரசியல் பதவிகள் கிடைத்தன. கறுத் இருபது ஆண்டுகள் வாஷிங்டனில் வாழ்ந்தார்.

1855 ல் டக்ளஸின் இரண்டாவது சுய சரிதை My Bondage and my freedom வெளிவருகிறது. 1881 ல் மூன்றாவது நூலான Life and Time of Fredrick Douglaus வெளிவருகிறது.

மிக சுவாரசியமானதாகவும், இலைமறைவானதாகவும் சாதியக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும் நம் தேசத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறைக்கும், டக்ளசின் சுய சரிதைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கிறது.

அத்தியாயம் 1 லிருந்து தனது பிறப்பு பற்றி...

"மேரிலாந்தில் 12 மைல்களுக்கு அப்பால் டுக்காஹோவில் நான் பிறந்தேன். குதிரைகளுக்கு எப்படி தாய்மை வயது தெரியாதோ அதைப் போலவே என் போன்ற பெரும்பாலான அடிமைகளுக்கும் வயது தெரியாது. என் தந்தை ஒரு வெள்ளையர். நான் எனது பிறப்பு பற்றி கேட்டு அறிந்த வரையில் அதை அனைவருமே ஒப்புக்கொள்கிறார்கள். என்னுடைய உரிமையாளரே தான் என் தந்தை என்றும் கூட சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதை நான் அறியேன். அதையும் வதியணைத்தும் எனக்கு மறுக்கப்பட்டது. என் தாய் நான் குழந்தையாக இருக்கும்போதே அவள் தான் என் தாய் என்று அறியும் முன்பே பிரிக்கப்பட்டு விட்டாள். நாணைந்து முறை தவிர என் தாயை பார்த்ததோ, அறிந்ததோ, உணர்ந்ததோ இல்லை. என் உரிமையாளரின் பண்ணையில் அவள் இறந்த போது எனக்கு ஏழு வயது. அவளது நோய்வாய்ப்பட்ட படுக்கைக்கோ, ஈமச்சடங்குகளுக்காகவோ எதற்குமே எனக்கு தெரிவிக்கப்படவில்லை. இவற்றை நான் தெரிந்து தெளிவதற்கு வெகு நாட்கள் முன்னதாகவே அவள் இறந்து போய் விட்டாள்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

இப்படி என் தந்தை யார் என்பது பற்றிய அந்த ரகசியத்தையும் ரொஸ்லாமி அவள், என் தாய் - திரைறன்ற இறந்துப் போனாள். என்னுடைய உரிமையாளரே என் தந்தை எனும் உலகம் சரியா பொய்யா என்பது தெரியவில்லை".

டக்ளஸின் ஏழரைட்டு வயதில் கர்னல் லாய்ட் என்பவரின் பண்ணையில் இருந்து பாலிடிமோருக்கு ஹரி-அல்ட் என்பவருடன் அனுப்பப்படுகிறார். அங்கே திருமதி ஹரி-அல்ட், டக்ளஸை மிகவும் கனிவாகவும் மனிதநேயத்துடனும் நடத்துகிறார். A முதல் Z வரையிலான எழுத்துக்களையும், சில வார்த்தைகளையும் கற்றுக் கொடுக்கிறார். இதையறிந்த அல்ட் மனைவிக்கு தடை போடுகிறார். இனி டக்ளஸின் வார்த்தைகளில்...

" அடிமைகளுக்குப் பாடம் நடத்துவது சட்டப்படி குற்றம். அது ஆபத்தானது என்றார். மேலும் அவர் சொன்னார், என்னை சுட்டிக் காட்டியபடி, இந்த அடிமைப் பயலுக்கு இப்போது நீ எழுதப் படிக்க சொல்லிக் கொடுத்தால் அவன் அடிமையாக இருக்கும் தகுதியையே இழந்து விடுவான். உரிமையாளரை மதிக்கத் தெரியாத சூழ்நிலை உருவாகும். அவனை அடக்கி வைக்கவே முடியாமல் போகும்."

" இதுவரை மிகச் சாதாரணமாய் அடிமை முறையை இழிவானதாக நம்பி ஏற்றுக் கொண்டிருந்த எனது மனதின் ஆழத்தில் எழுந்த அந்த சொற்கள் புதிய வகையான எண்ண ஓட்டங்களை எனக்குள் ஏற்படுத்தியது. கிழக்கு அடிமைத் தளையிலிருந்து வடக்கை நோக்கிய பாதை எனக்கும் புலப்பட்டு விட்டதென்றே தோன்றியது. எனக்குத் தேவைப்படுவது அது தான். உடனடியாக கல்வி கற்கும் வாய்ப்பு போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தினேன். நான் உரிமையாளர் ஹீவன் வீட்டில் ஏழு வருடங்கள் வசித்தேன். அந்தக் காலத்தில் எப்படியோ பாதுபட்டு படிக்கவும் எழுதவும் கற்றேன். நான் ஒரு நாணிதலோடு கருப்பதை பார்ப்பதைவிட. வேறு எதும் திருமதி ஹரி அல்ட்-க்கு அவ்வளவு கோபத்தை கொண்டு வந்து விட முடியாது. அடிமை முறையும் கல்வியும் ஒன்றுக் கொன்று எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நன்கு உணர்ந்த ஒரு சரியான நபராக அவர் இருந்தார். நான் பல சமயம் கையில் புரட் எடுத்துச் செல்வேன். இந்த புரட்டை பசித்த வெள்ளை சிறுவர்களுக்கு நான் கொடுத்தேன். அவர்கள் எனது அறிவுப் பசிக்கித் தீனியிடுவார்கள். அவர்களில் சிலரது பெயர்களை இங்கே குறிப்பிட வேண்டுமென்று துடிக்கிறேன். ஆனால் அவர்கள் ஒரு அடிமைக்கு எழுத்தறிவித்ததற்காக வேலையாப்படலாம் என்பதால் தவிர்க்கலாம். ஏனென்றால் இந்த கிறிஸ்துவ நாட்டில் அடிமைகள் படிப்பதுமுக் கூடாதல்லவா?"

"தொலம்பிய பேச்சாளன்" என்ற புத்தகம் டக்ளசின் கைக்கு கிடைக்கிறது. ஒரு அடிமைக்கும், அடிமை உரிமையாளனுக்கும் கடைபெறும் உரையாடலின் பதிவுகளும், ஷெரிடன் என்பவரின் அடிமை முறைக்கு எதிரான மேடைப் பேச்சுகளும் அதில் அடங்கியுள்ளன. இதைப் படிக்கும் டக்ளஸ் சொல்கிறார்...

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

" இவற்றை படிக்க படிக்க நான் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தப்பட்டேன். கோபம் கோபமாக வந்து எனது எண்ணாட வெலைகள் நடையட்டை. வாசிக்கப் படுகியது ஒரு சாபம் என்று கூட நான் நினைக்கும் அளவு கருவுகள் அனைத்தும் என்னை அடிவைத்துக் கொண்டிருந்தன. எனது கேவலமான நிலையை புரிய வைத்த புத்தகங்கள், அதிலிருந்து மீள்வதற்கான வழியைச் சொல்லவில்லை. என் அடிமைத் தோழர்களின் முட்டாள் தனத்தையும் அறியாமையையும் பார்த்து வாடாமல்பட்டேன். என்னவானாலும் விடுதலை பெற வேண்டும் என்றும் உணர்வலிருந்து என்னால் மீள முடியவே இல்லை. மிக அடிக்கடி எனது கேவலமான நிலைக்கு விடுதி தற்கொலை செய்து கொள்ள நான் நினைத்தேன். விடுதலை அடைந்து விடுவோம் என்றும் நம்பிக்கை மட்டும் இல்லாமல் போயிருந்தால் நான் என்னையே கொலை செய்து கொண்டிருப்பேன். அல்லது கொலை செய்யப்படும் படியான குற்றம் எதையாவது செய்து மடிந்திருப்பேன். இந்த மனிதனின் ஒருவர் அடிமை முறைப் பற்றி என்ன பேசினாலும் கேட்கத் துடித்தேன். எப்போதும் தயாராக இருந்து கவனித்தேன்."

ஹரீட்-அலிட்டின் வீட்டில் வசிக்கும் டக்ளஸின் பழைய உரிமையாளர் இறந்து விட, அவரின் மகனுக்கும் மகளுக்கும் இடையிலான சொத்துப் பரிவினை நடக்கிறது. அந்த சொத்துப் பரிவினைக்காக [அவனின் அடிமைகள் வெள்ளையர் களின் அரையும் சொத்தாகவே கருதப்படுகின்றனர்] பால்டிமோரிலிருந்து வந்து, சொத்து பரிக்கப்படும் பழைய உரிமையாளரின் மகள் லுக்ரேசியாவின் அருந்தக் கணக்கில் சேர்க்கப்படுகிறார். சொத்துப் பரிக்கப்படும் முறையை டக்ளஸ் கூறுகிறார்...

" இப்போது ஒரு பதினாறு வயதிருக்கலாம் எனக்கு. கணக்குப் பார்த்து சொத்து அளவை நடந்து ஐந்தில் நாங்கள் அனைத்து அடிமைகளும் குவிக்கப்பட்டோம். நாங்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், முதியவர்கள், கைவிடப்பட்டவர்கள், அனைவரும் ஆடு, மாடு, குதிரைகளோடு ஒன்றாக வைத்து அளக்கப் பட்டோம். சொத்துக் கணக்கு முடிக்கப்பட்ட பிறகு சொத்துப் பரிவினை சுலபமானது. இந்த நேரத்தில் எங்களின் மனதில் எத்தனை துயரமான வலி மிகுந்த எதிர்பார்ப்பும், பிரார்த்தனையும் அடங்கி என்பதை விவரிக்க இப்போது என்னிடம் வார்த்தைகள் இல்லை. எங்கள் வாழ்வின் தலைவிதியை அப்போது நிர்ணயித்தார்கள். அதைப் பற்றி கருத்துக் கூற எங்களுக்கு எந்த உரிமையும் இருக்கவில்லை. எங்களோடு சேர்த்து கணக்கிடப்பட்ட மிருகங்களைப் போலவே நாங்களும் வாய்மூடி நின்றிருக்க வேண்டும்".

லுக்ரேசியா, டக்ளஸை மீண்டும் ஹரீட்-அலிட்டிடம் அனுப்பி வைக்கிறார். இரண்டு வருடங்களில் லுக்ரேசியா இறந்து விட, லுக்ரேசியாவின் கணவர் தாமஸ் டக்ளஸை தன்னிடம் அழைத்துக் கொள்கிறார். டக்ளஸ், தாமஸ் தாங்கிணை நடந்திய விதம் பற்றிக் கூறுகிறார்...,

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

"என் உரிமையாளர் தாமஸ் பே-னைட் என்னுமிடத்தில் நடந்த கருத்துவ 10த் முகாம் கூட்டத்தில் கலந்து கொண்டார். நான் அந்த முகாம் அவரது அடிமைகளை நோக்கிய அவரது எண்ணத்தை மாற்றிவிடும் என்றே நம்பினேன். ஆனால் அந்த முகாம் அவர் மீது ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தால், அது அவரை மேலும் முரடனாகவும், கொடியவராகவும் மாற்றியதாகவே நான் கருதினேன். முகாமில் கலந்து கொள்ளும்முன் தனது எஸ்டேட் கொடிய நடத்தைகளுக்கும் தண்ணை மட்டுமே கேடயமாகப் பயன்படுத்த வேண்டியிருந்தது அவருக்கு. ஆனால் அதன் முறைகோ தான் அடிமைகளுக்கு எதிராகச் செய்யும் எல்லாக் கொடுமைகளுக்கும் மதரீதியான அங்கீகாரம் கிடைத்ததை அவர் உணர்ந்தார். அதற்கு ஒரு உதாரணம், அவர் ஒரு உளவுமுற்ற கறுப்பின இளம்பெண்ணை கட்டிப் போட்டு புட்டத்தில் கரந்தம் கொண்டும் வரை சாட்டையால் அடித்து விட்டு. [குறைந்த பட்சம் 200 முறையாவது] .... தனது உரிமையாளரை அறியாதவன் ... பணியாதவன் ... கொற்படி நடவாதவன் .... பலமுறை அடிக்கப்பட்டும் எதும் ஒவ்வியத்தின் வலியை வாசிப்பார். காலை சிற்றுண்டி வரை அடித்துவிட்டு தமது வேலைக்குச் சென்று மாலையில் திரும்பி மறுபடியும் இரத்தம் தோய்ந்த பட்ட அதே இடத்திலேயே அவர் அடிப்பார். அவர் இவ்விதம் அப்பெண்ணிடம் நடந்து கொண்டதன் ரகசியம் என்னவெனில் அவளால் எல்லோரையும் போல வேலை செய்ய இயலாது. அவளுக்கு உணவு அளிப்பது மிகவும் வெட்டிச் செலவானது என்று கருதினார். எனவே அடித்து உதைத்தாவது அவளை இல்லாமல் செய்து விடுவது அவரின் நேர்மையான திட்டமாக இருந்தது.

கடிய வரைவில் தாமஸ் மதக் கூட்டங்களில் பகுதி தலைமைப் போதகராக உயர்த்தப்பட்டார். அவரது ஒரு பிரார்த்தனை விபரணை. ஏராளமான மத போதகர்கள் வந்தார்கள். எங்களைப் பட்டினி போட்டு சிலர், அவர்களது உயிரற்றை நிரப்பினார்."

1833-ம் வருடம் தாமஸைக் இருந்து கொலை என்பவனின் பண்ணைக்கு அனுப்பப்படுகிறார் டக்ளஸ். ஏகாலையைப் பற்றி டக்ளஸ் கூறுகிறார் ... "வாழ்வின் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அடிமை முறையின் ஆதரவாளர்மான கருப்பை அனுபவித்தேன் என்றால் அது அகவேயொரு நான் கழிந்த முதல் 6 மாதங்களில் தான். நரபலி மட்டுமே என் ஒரே ஒய்வு நாள். ஒரு ஓலைங்கைப் போல உணர்வற்று, ஏதாவது ஒரு பெரிய மரத்தடியில் தூங்கி விழித்து அப்படியே அந்நாளைக் கழித்தேன். எப்போதாவது தீவிரமான ஒரு வேகம் பெற்று எழுவேன். வருதலை உணர்வு ஒரு சூறாவளி போல என் ஆன்மாவை அலைக்கழிக்கும். நம்பிக்கை புனி மெலிதாகத் தெரியும். ஆனால் காற்றில் அலைந்து அணைந்து விடும் அந்தச் சுடரைப் போலவே சற்று நேரத்திற்கெல்லாம் சோர்ந்து வருந்து விடுவேன்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

என் பரிதாபமான நிலையை நினைத்து துக்கம் பீறிட அழுவேன். சில சமயம் தொவேயை தொன்று விடு நாமும் ஒரந்து விட வேண்டும் என்று தீர்மானம் செய்வேன். ஆனால், நம்பிக்கையோடு அச்சமும் கலந்த ஒரு உணர்வு தயங்கியபடி வருவேன். இப்போது நினைக்கும் போது அந்தப் பண்ணையில் என் வாழ்க்கை ஒரு பயங்கர கனவு மாதிரிதான் தோன்றுகிறது".

தெவேயின் பண்ணையில் மற்ற அடிமைகளுடன் கோதுமையை தூற்றிக் கொண்டிருக்கும் டக்ளஸ் மயங்கி விழ, அங்கே வந்த கொவே அவரை எழுப்பிக்கின்றான். பின் டக்ளஸின் இடுப்பில் தொங்கி ஒரு உதை விடு எடுத்து சொல்கிறான். எழுந்து நிற்கும் டக்ளஸ் மீண்டும் சுருண்டு விழுகிறார். இனி டக்ளஸின் வார்த்தைகளில்... "அப்படி நான் விழுந்து கிடக்கையில் தொவே தனியாக அப்புறப்படுத்த வைத்திருந்த நுள்ளாணியை எடுத்து வந்து என் மண்டையில் தொங்கி அடித்தான். இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அதை சட்டை செய்யாமல் அவன் திரும்பவும் என்னை எழுந்திருக்கச் சொன்னான். நான் எந்த முயற்சியும் செய்யவில்லை. என்னால் முடியவில்லை. அவன் என்னை என்ன செய்தாலும் பரவாயில்லை என்று அப்படியே கிடந்தேன். கொவேக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வேறு வழியில்லாமல் என்னை அப்படியே விட்டுவிட்டு போய் விட்டான்".

இரத்தம் வழிய தளர்ந்து போன உடலுடன், அயர்ந்து காட்டுன் வழியே 7 மைல்களுக்கு அப்பால் இருக்கும் உரிமையாளர் தாமஸிடம் ஓடி முறையிடுகிறார். தாமஸ் மீண்டும் தொவேயிடம் அனுப்பி வைக்கிறார். திரும்பி வந்த டக்ளஸுக்கு கொவே கசையடி கொடுக்க முயல, முதன் முறையாக டக்ளஸ் என்னும் அடிமை தன் உரிமையாளனுக்கு எதிராக வன்முறையில் இறங்குகிறார். இதைப் பற்றி டக்ளஸ் சொல்லும்போது. "கொவேயுடன் நடந்த இந்த யுத்தம் என் அடிமை வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனையாக அமைந்து விட்டது. என்னுள் எங்கோ எஞ்சியிருந்த விடுதலை வேட்கை என்னும் நெருப்பை கிளறி விட்டது. விடுதலை பற்றே ஆக வேண்டும் என்ற ஏவுதலை மீண்டும் தூண்டிவிட்டது. ரத்தக் கறை படிந்த அடிமை முறையில் தொடரக் கூடாத வன்முறை தொடர்ந்து எதிர்த்த ஒருவனாகவே நான் அனுபவித்த இழிந்த மன திருப்தியை உணர முடியும்".

1834-ம் ஆண்டு தெவேயிடம் இருந்து ப்ரியாந்து என்பவரிடம் டக்ளஸ் வாடகைக்கு அனுப்பப்படுகிறார். ப்ரியாந்து பற்றி டக்ளஸ் குறிப்பிடும் போது... "ப்ரியாந்து மதிப்பும், மனித நேயமும் ஒருங்கே கொண்டிருந்தார். ஒரு அடிமை என்பதை விட ஒரு மதவாதியின் அடிமை என்பதுதான் நான் அனுபவிக்கும்

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

தொகுங்கொள்கையின் உச்சமாகும். நான் பார்த்திருக்கும் அடிமை உரிமையாளர்கள் அனைவரிலும் மதவாத அடிமை உரிமையாளர்களை மிகவும் கொடுமையவர்கள். ஆனால் ப்ரிலாந்து ஒரு மிதவாதமான மதவாதி அல்ல. மதவாதியாக அவர் நடிக்கவும் இல்லை."

முதல் முறையாக தனது அடிமைத் தனையிலிருந்து விடுபட நினைத்து அங்கேயிருந்து தப்பிக்க திட்டம் தீட்டுகிறார் டக்ளஸ். இது தெரிந்து விட போலீஸ் அவரை சிறையில் அடைக்கிறது. சிறையில் இருந்து டக்ளஸை மீட்க உரிமையாளர் தாமஸ், டக்ளஸை மீண்டும் ஹை-அல்டிடியூட் அனுப்புகிறார். ஹை அல்டி, டக்ளஸை தச்சு வேலைக்கு அனுப்பி, அந்த வருமானத்தை முடங்கி கொள்கிறார். இச்சூழ்நிலையில், 1838 ஆம் வருடம் டக்ளஸ் நியூயார்க்கிற்கு தப்பி வருகிறார். அங்கே ஒரு கப்பல் தொழிற்சாலையை வேலைக்கு சேரும் டக்ளஸ், தன்னுடன் பால்டிமோரில் அடிமையாயிருந்த அன்னா என்னும் பெண்ணிற்கு கடிதம் எழுதி வரவழைத்து, மணந்து கொள்ளுகிறார். இப்போது அவர் மற்றவர்களைப் போல ஒரு சுதந்திர மனிதராகிறார். அதுவரை ஃபிரெடரிக் பெய்லி என்றிருந்து பின் ஃபிரெட் ஆன்சனாகி இறுதியில் ஃபிரெடரிக் டக்ளஸ் ஆகிறார். அடுத்த சில ஆண்டுகளுப்பன மக்களின் உரிமைக்காகப் போராடும் பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், தலைவராகவும் உயருகிறார். இதைப்பற்றி டக்ளஸ் கூறுகிறார்... " நாண்டுக்கெட்டில் 1841 ஆகஸ்ட் 11 அன்று நடந்த அடிமை எதிர்ப்பு மாநாட்டில் நான் பேசத் துடித்தேன். அன்று வரவேண்டிய பேச்சாளர் வர முடியாமல் போனதால் என்னைப் பேச ஏற்பாடு செய்தார்கள். உண்மையில் முதலில் நடுங்கிய நான், என் சகோதரர்களுக்காகப் பேசுகிறேன் என்பதை நினைத்தபோது உயர்வாய் உணர்ந்தேன். அன்று முதல் நான் இப்போது வரை - இனியும் மானுடத்தின் கடைசி அடிமை மீட்கப்படும் வரை - என்னுடைய சகோதர அடிமைகளுக்கு ஆதரவாக - தொடர்ந்து குரல் கொடுப்பேன். எனது முன்னோர் அடிமை, நேர்மையை பற்றி என் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அடிமைத் தோழர்கள் முடிவு செய்யட்டும்."

இவ்வாறு ஃபிரெடரிக் டக்ளஸின் சுயசரிதை, ஏ.வ கிரக்கமற்ற கொடுமைன அடிமை முறையின் ஆவணப் படமாக நம் கண்முன் விரிகிறது.

- ஆதவன் BSMS

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

கவிதை

புறத்திலிருந்து

நம் கல்லூரி வட்டத்திற்கு வெளியிலிருந்து பெறப்படும் படைப்புகள்.

கார்காலக் குறிப்புகள்

மழைநீர் தேங்கிய தெருக்களில்
வாகாய் கால்வைத்து நடக்க
சேற்றில் ஒரு சொங்கல்
எப்போதும் முளைத்து விடுகிறது
யார் வைத்தார் இதை
என்ற கேள்வியேதும் எழாமல்
எட்டி கவனமாய் கால் பதித்து
அவ்வொரு முறையும்
நாணும் கடந்து செல்கிறேன்
எவர் காலது
என்று அதுவும்
நோகாமல்
எப்போதும் முளைத்து விடுகிறது
நவநி
அருகில்
சேற்றில் விழுந்த சுவடுகள் காயும் முன்னே
சுமந்த சுவடுகளோடு சுவடின்றி
மறைந்தும் போய்விடுகிறது.

— உமர்மதி.

நன்றி: தீராநதி, அக்டோபர் 2003.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

அகத்தீசர் சண்ட மாருத செந்தூரம்

"தோல்லைகளாகிய அல்லலில்லை
முன்னால் மூலிகைச் சாறு - நல்ல
முத்திரும் பட்டை கியாடிமது
தன்னாலரையாமல் - ரஷயில்
தாக்கிரும் வெய்யிலில் வையாமல்
தானன ஊட்டிவிட்டு - மேடி
சங்குவாய்ச் சீலைகள் செய்யாமல்
படம் போட்டு மாயாமல் - கள்ளன்
பொக்கிஷக் காலடி கண்டது போல்
நிடம் பெற்ற செந்தூரம் - அதி
சீக்கிரம் செய்திரும் தொழில் முறை கேள்
பூரந் நிசை யெடையாம் - அதில்
பூட்டிரு லிங்கத்திக் கெடையாம்
விரம் ஏலையெடையாம் - கன்னம்
வேட்டிய தொந்தியும் ஏரணை
செந்தூரம் வீரணை - கதில்
சேர்ந்த சரக்கெல்லாம் சுத்தி செய்து
சந்தோஷமாகவே தான் - அம்மி
தன்னிலிரு ஜாமம் தானரைத்தால்
வர்ண பவடி சிறம்."

பூரம் 4 வராகனை, லிங்கம் 8 வராகனை, விரம், நெல்லிக்காய் கந்தி, கரச செந்தூரம் வகைக்கு 2 வராகனை தொண்டு கூட்டியரைத்தால் மட்டுமே வாய் மிடிக்காது குழந்தைகள் முதல் அனைவருக்கும் கொடுக்கலாம். மேற்கண்ட எடைபோல் போட்டு இரண்டு சாமம் அரைத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். அணைந்து வியாதிக்கும் பயன்படுத்த சிறந்த கொடுக்கும் அளவு முறையில் கண்டது.

பத்தியம் :- கச்சா பத்தியம்.

குறிப்பு:- இச் சண்ட மாருதத்தில் மேலைகச் சாறோ, கியாடிமோ, முட்டை வெண் கருவோ தொண்டு அரையாமல் மேற்கண்ட சரக்கினை மட்டுமே தொண்டு அரைத்துக் கொள்ளவும். இது மிகச் சிறந்த பச்சை மைட்டு மருந்தாகும்

D. சரவணக்குமரன் B.S.M.S

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

சினிமா

53/100

புதுமைகள் - புளித்துப்போன கற்பனைகளிலிருந்து அறியப்படாத யதார்த்தத்தை நோக்கி.

மூன்றாம் தரமான கதைகளையும், மலிவான கதாபாத்திரங்களை மட்டுமே கங்கணம் கட்டிக் கொண்டு தொடர்ந்து கொடுக்கிற தமிழ் சினிமா சீடனில் அபூர்வமாய் சில தரமான படைப்புகள் எப்போதாவது உருவதுண்டு. இதுவும் அதுபோன்ற ஒன்றுதான். முதல் காட்சியிலேயே மயானபூமி அதற்கே உரிய கூச்சும் தன்மையோடு நம்முன் விரியும் போதே நமக்குள் ஓர் எதிர்பார்ப்பு உண்டாகிறது.

மயான பூமியில் பிறந்து அனாதையாகி, வெட்டியானால் வளர்க்கப்பட்டு அதே தொழிலை செய்யும் ஓர் வெட்டியான். மூன்று சீட்டுகள் வைத்து விளையாடுவது, லேகியம் விற்பது போன்ற ஏமாற்று தொழிலில் ஈடுபட்டு பிழைப்பு நடத்தும் சக்தி. கஞ்சா விற்கும் ஒரு பெண். இவர்களுக்கு இடையே நடக்கும் கண்ணுக்குத் தெரியாத இழைகளால் பின்னப்பட்ட மெல்லிய மனித உறவின் வெளிப்பாடுதான் கதை.

மயானத்தில் பிறந்து வெட்டியானால் வளர்க்கப்படும் சித்தன் (விக்ரம்), அந்த வெட்டியான் இறந்ததும், மயானத்தை விட்டு வெளியேறுகிறான். அப்போது அறிமுகமாகும் கஞ்சா விற்கும் பெண், விக்ரமை கஞ்சாத் தோட்டம் வைத்திருக்கும் தன் முதலாளியிடம் வேலைக்குச் சேர்த்து விடுகிறார். பின் கஞ்சா கடத்தும் போது போலீசில் மாட்டிக் கொண்டு சிறைக்கு சென்று விடுகிறார். அதுவரை எந்த ஒரு மனிதனிடமும் சம்பிரதாய முறையில் கூட உறவு வைத்திராத சித்தனுக்கு, சிறையில் அறிமுகமாகும் சக்தியுடன் ஆத்மார்த்தமான நட்பு மலர்கிறது. சிறையிலிருந்து வெளியே வரும் சக்தி கஞ்சாத் தோட்ட முதலாளியிடம், சித்தனை ஜாமீனில் வெளிக் கொண்டு வர வேண்டும் என்று மிரட்டுகிறார். முதலாளி சித்தனை ஜாமீனில் வெளியே எடுத்ததும், உடனே விட்டு ஓடிவிட தயாராகிறார். இதற்கு சக்தி எதிர்ப்பதால் சக்தியை தொடர்ந்து வருகிறார். அதுவரை எந்த ஒரு உயிருக்கும் பரிவு காட்டாத சித்தன், தன் நண்பனுக்காக முதலாளியை, ஒரு பயங்கர மிருகத்தையும் விட தொடரேமான ஆவேசத்துடன் கொன்று பழி தீர்க்கிறார். சித்தன் நேசித்த ஒரே ஒரு மனிதனும் இறந்து விட, அதுவரை ஒரே வீட்டில் வசித்த கஞ்சா விற்கும் பெண் மற்றும் சித்தனின் நண்பர்கள் இவர்களை விட்டு மீண்டும் தன் போக்கில் சென்று விடுகிறார்.

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

வெட்டியானாக வரும் விக்ரம் ஒரே ஒரு வசனம் பேசுகிறார். இரண்டு முறை பிணங்களை எரிக்கும்போது பாருகிறார். மற்றபடி அவரிடமிருந்து மிருகங்களுக்கே உரிந்தான உறுமல்களும், சீறல்களும் மட்டுமே வெளிப் படுகிறது. வெட்டியானாக இருப்பதால் மட்டுமே இவ்வளவு மிருகத்தனமாகவும் அசாதாரணமாகவும் ஒருவன் இருக்க முடியுமா என்று கேட்கலாம். அவன் தொழிலை விட அவன் தனிமையே அவன் குணாதிசயங்களை நிர்ணயம் செய்கிறது. தனிமையை உணராமல் தனிமையை ஏற்றுக் கொள்பவர்க இது சாத்தியமில்லை. தனிமையை மிகக் கொடூரமாக உணர்கின்றவன் அதை விட்டு வெளியே வர முயற்சிப்பதும், மீண்டும் அதிலேயே அமுங் உடல்கின்றவனிடம் இருந்தும் இதை விட கொடிய மிருகத்தனமும், அசாதாரணமான தன்மையும் வெளிப்படலாம். கடவுளுக்கான மனோன் பண்புகளும் வெளிப்படலாம். இரண்டுமே அந்தக் கதாபாத்திரத்திடம் இருந்து வெளிப்படுகிறது.

எந்த ஒரு கலைஞன் தன்னை முதன்மைப் படுத்தாமல் பாத்திரத்தை என்ற பாத்திரத்தை மட்டுமே முதன்மைப் படுத்துகிறானோ அவனே சிறந்த கலைஞனாகிறான். இந்த வகையில் சூர்யா சிறந்த கலைஞனாகிறான். என்பதை ஒப்புக் கொண்டேயா வேண்டும்.

கஞ்சா ஏற்கும் பெண்ணாக வரும் சங்கீதா - இவரைத் தவி வேறு யாரேனும் இப்பாத்திரத்தை கனக்கச்சிதமாய் செய்திருக்க முடியு என்பது சந்தேகம் தான்.

கதையின் யதார்த்த இடையோடு ஒட்டாத ஒரே பாத்திரம் லைலா. பாலைபெக்னிக் படிக்கும், பல் மருத்துவரின் பெண், 3 நிட்டு வைத்து மிதிதலாட்டம் செய்பவனுடன் எப்படி காதல் கொள்கிறாள் என்பது தெரியவில்லை. குடும்பத்தின் கட்டுப்பாடின்றி, அவர்களுடனே உளர் சுற்றுவதும், அவர்கள் வீட்டிலேயே தங்கி இருப்பதும் எந்த அளவு லாஜிக் எனத் தெரியவில்லை.

ஒரு காட்சியின் அழுத்தத்தை, இசையில் முழுமையாக வெளிப்படுத்த முடியும் என பல இடங்களில் மின்னி இசை மூலம் நிரூபித்திருக்கிறார் இளையராஜா.

மனித மனங்களின் இரு முகங்களை துணிந்து ஆராய்ந்து பார்க்கும் அரிய படைப்பாளியாக இயக்குனர் பாலா பரிணமித்திருக்கிறார். இது போன்ற கலைஞர்கள் தோன்றிக் கொண்டிருக்கும் வரை, ஃப்ராய்ட் கண்டுபிடித்த கருவை தான். படத்தின் முதற்பாதி கதாநாயகன் இயக்குனர் பாலா தான் என்பது மிகையில்லை.

- கதிர் BSMS

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

குருதிமை

அந்தி மயங்கும் நேரம், நவீனர்களுக்கு மட்டும் அடிகாக. கல்லூரி விடுமுறை, கூடியிருந்த கூட்டத்தின் பலத்தைத் தாண்டியது புதைவண்டி பலம். நிரம்பி வந்திருந்த வண்டி, நின்றிருந்த எங்களையும் ஏற்றி நின்றது, எதையும் தாங்கும் நம் தேயத்தைப் போல.

வறுமையின் வாசம், அவசர விற்பனை குரல்கள், அழுகை சத்தம்.... வலியில் தெரிந்த என் தலை, ½ நிமிட அமைதிக்காக தெங்கியது. 'கிடைக்காது' என்றவுடன் வணங்கி ஏற்றுக் கொண்டது நடிகை. கால் பதிக்க இடமின்றி கண்கள் சுருகியது. இன்னலோர ஏற்றை இருக்கையில் உறங்கிய ஆள் அறிவு, உயிர்த்தெழுந்து தாவியது கீழே.

இதற்காகவே காத்திருந்த என் உடல் என்று அமர்ந்தது அவ்விருக்கையில். தலைவலியுடனே, தந்தையின் குரல். 'Reservation செய்து வந்திருக்கலாம். ஏன் இப்படி கூட்டத்தில் தொற்றிக் கொண்டு?' பிரமை. அங்கு Hindu, Indian Express வாசகர்கள், செயற்கை புன்னகையில் குலம் விசாரிக்கும் பெண்கள் கேள்வியால் எனக்கு பயத்தியமே பிடித்து விடலாம். இங்கு தலைவலி தானே, சுமந்தே ஆகலாம். எப்படியாயினும் இவை சாயமில்லாத உண்மைகள்.

காலிகளை இருக்கையில் மடிந்து சிரிர்ந்து தொண்டேன். தரையை நாடிக் நிறுவர்கள், பிச்சை யெடுப்பவர்கள் என நிரம்பியிருந்தனர். வண்டி நிலம் பிளந்து. நண்களை மூடினேன். தலைவலியினோடே மனவலிகளும் தூண்டிக் உரவா? என்று கேட்டன. வலுக்கட்டாயமாக கைகளை மேலும் இறுக்கினேன். சாம்பல் புத்திருந்த தனல் மேல் சூறாவளி காற்று வீசி அடித்தது. கனன்று கொண்டிருந்த நினைவுகள் தீயாக தகிக்க தொடங்கின. கடந்து போன கசப்பான நிகழ்வுகள், உதிரம் வரை உறைய வைத்த உதாசீனங்கள்.

செய்த உதவிகள் - எங்கோ இருக்கும் சொர்க்கத்தில் எனக்கோர் இடம் காண்பதற்காகவா... உதவி செய்தல் - என்றோ ஒரு நாள் முந்த இதயத்தில் யாரோ வீசிய நல்ல விதை.... இன்று என்னையே விழுங்கத் துடிக்கும் முரட்டு விருட்சமாக. உதவிகளுக்கு பரிசாக உதாசீனங்கள் கிடைத்திருந்தன. நண்பர்கள் - மறுத்திருக்கலாம் என்னை, மறந்தல்லவா போயிருந்தார்கள். என்னையே நான் ஏமாற்றி விட்டேன். நடந்து முடிந்த எதுவும் நடக்கவில்லை என்று. இதயம் பாறையாய் மாறிக் கொண்டிருந்தது. பூவாய் ஏதோ நினைவு வருடியது, கண் திறந்தேன்.

நரிக்குறக் குழந்தையின் அன்னையாய் காணா பரட்டைத்தலை, கண்ணில் பசி, விரிட்டு அடித்து தொடங்கியது. இன்னலோர ஜடமாய் நான், கைப்பையில் இருந்த BRITANNIA கல்லாய் கனத்தது. 'அதன்' வயிற்றுக்கு வேண்டியது என் பையில். இருந்தும் அரையில்லாமல் நான்? நானா இது?

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE

'அதன்' கதறல் என்னைத் தொடவேயில்லை. உலகத்தின் மேலுள்ள ஏரக்தியில் 'அதை' பழி வாங்கத் தொடங்கி விட்டேனோ? என்னுள் கருந்த 20 வருட தாய்மை சடலை எரத்து விட்டதா?

"பெண் தாய்மை அடைந்தவுடன் முழுமை பெறுகிறாள்" எங்கோ படித்தது. அப்படியென்றால் 3 வயதில் நான் முழுமையடைந்தேன். என் பாமியும், அத்தியும் (பொம்மைகள்) நான் நல்ல பிள்ளைகளாக வளர்க்க விரும்பினர்? அத்தியின் தலை தண்ணீரில் நனைந்த போது துவட்டி, சாம்பிராணி பிடித்து, தூங்க வைத்து, காய்ச்சல் வந்தா, என்று இரவெல்லாம் தொட்டுப் பார்த்து துடித்த தாய்மை.... பாமி சரியாக சாப்பிடாமல் மெலிந்ததைப் பார்த்து துவண்ட தாய்மை.... ஆம், இன்று எரத்து விட்டது!

முழுமையாக ஏற்றுக் கொள்ள முடிந்தது.... அன்பு, தியாகம், தாய்மை - அர்த்தமற்ற மதற்றல்கள். அவற்றைக் கடைப்பிடிப்பவர்கள் விநோத பயிற்சியங்களாய் கருதப்படவும், தனிமையில் கதறி அழவும் பழக்கப்பட்டவர்களாய். ஏனோ அதன் அழுகை சத்தம் காதுகளுக்கு எட்டவில்லை.

என் வெந்த பார்வை வெளியிலே விழுந்தது. தழைத்து, நிமிர்ந்து நின்றன தண்டவாள ஓர செடிகள். பச்சை நிறம், கண்ணில் லேசான குளிர்ச்சி நுரையீரலுக்கு மருந்தாய். 'சிறு செடி, எத்தனை குளிர்ச்சி' சடலை ஏதோ பொறி தட்டியது!

ரயிலின் ஹாரன் சத்தம்....

ஏறுங்கை உயுக்கும் அதிர்வுகள்...

இந்தனையும் இவை இயல்பாய் நாம்வுவதால் மட்டுமே, கிடைத்தது என் விழிகளுக்கு ஒரு வருடல். அந்த குளுமையின் அனுபவம்.... வார்த்தைகளில்லை விவரிக்க.

தூர மலை மேல் துயரின்றி, துருக்காக நின்ற செடியைப் பார்த்து ஏளனமாய் சிரித்தேன். ரயிலடியில் கிடக்கும் தளிர்கள் பச்சை நந்தவனத்தில் நாளை சிதைந்து போவதென்னமோ உறுதிதான். ஆனால்...., என் கண்களில் பரவிய குளிர்ச்சியை மீண்டுமொரு முறை கண் மூடி அனுபவித்தேன். அதனைச் சுரந்த சுபான நீர் என்னை தாண்டி ஜன்னல் கம்பி தொட்டு, விழுந்து தெறித்து நற்றாடைகளின் மீது. அவை புரிந்து கொள்ளுதலுக்காக நன்றியுடன் சிரித்தன என்னைப் பார்த்து.

கைகள் அனிச்சையாய் குழந்தையை வருட, BRITANNIA அதன் கையில், அவன் என் மடியில் நான் கல்லாய். கட்டி கருத்து வந்த என் கதயம் ஆகாயத்துப் பட்டமாய். உறங்கி விட்ட உணர்வுகள் புத்துயிர்ப்பாய் மலர்ந்து கொண்டிருந்தன. தூங்கி விட்ட குழந்தையின் துவண்ட ஆடையின் கலவை வாசனையால்.

கடைசியில் அந்த பெண்பற்றி எதுவுமே சொல்லவில்லையே

— ஐயா BSMS

AMUDHAKALASAM SIDDHA LITERARY RESEARCH CENTRE